**பிராந்திய பால செயற்திட்டம் II (யுகே இரும்பு பாலங்கள் செயற்திட்டம்) - 2018**

---

பிராந்திய பால செயற்திட்டம் II (யுகே இரும்பு பாலங்கள் செயற்திட்டம்) இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் காங்காங் மற்றும் சாங்காய் வங்கி முகவராண்மைக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 53எம;/எப்சீ/1448(201327/எஸ்எல்) ஆம் இலக்க 2013 ஜுன் 21 ஆந் திகதியிடப்பட்ட கடன் உடன்படிக்கையின் உறுப்புரை (I) உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள்,துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. 104 கிராமிய பாலங்களின் வடிவமைப்பு, நிலஅளவை மற்றும் வழங்கள்இதொழிநுட்பஉதவியினை வழங்கள் மற்றும் பயிற்சியளித்தல் என்பவற்றை செயற்திட்டத்தின் குறிக்கோள் கொணடுள்ளது. பின்னர், நிர்மானிக்க பட்டியலிடப்பட்டிருந்த பாலங்களின் எண்ணிக்கை 2017 ஒகஸ்ட் 28 ஆந் திகதிய ஒப்பந்த விளக்வுரை இல 9 இனூடாக 66 பாலங்கள் வரை குறைக்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 12,275.13 மில்லியனுக்குச் சமனான யூஎஸ் டொலர் 88.72 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா. 9,775.13 மில்லியனுக்குச் சமனான யூஎஸ் டொலர் 70.65 மில்லியனை காங்காங் மற்றும் சாங்காய் வங்கி நிறுவனம் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. மீதித் தொகை ரூபா 2,500 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2013 செப்தம்பர் 19 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2017 செப்தம்பர் 18 அளவில் பூர்த்திசெய்வதற்குப் பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2018 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்ட ரூபா 249.29 மில்லியன் பெறுமதியான பால கூறுகளின் இருப்பு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | சிவில் நடைமுறை வேலைப் பெறுமதியில் மிகை. | உடன்படுகின்றேன். | வேறுவேறாக கணக்கிடப்படல் வேண்டும். |

### 2.2 தீர்க்கப்படாத மீதிகள்

| விபரம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 327 மில்லியன் | நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் தவறான | அது பொது திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட நிதியினை | அமுல்படுத்தல் முகவருடனான உடன்படிக்கையில் |

| | | | |
|---|---|---|---|
| தொகையான விசேட முற்பணம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 வருடங்களிற்கும் மேலாக செலுத்தப்படாததாக காணப்படுகின்றது. | அறிக்கையிடல். | பயன்படுத்தி 2019 இல் முழுமையாக தீர்க்கப்படும். | உள்ள கணக்குகள் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2017 செப்டம்பர் 16 இல் ஆரம்பகட்டமாக பூர்த்தியாக்க திட்டமிடப்பட்டிருந்த 66 இருப்பு பாலங்களில் 60 இருப்பு பாலங்களின் நிர்மான வேலைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. பாலங்களின் நிர்மான வேலைகள் மீதான குறைசெயலாற்றலின் பெறுபேறாக, செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதி 2019 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், ஏனைய பாலங்களின் நிர்மான வேலைகள் மீதான பௌதீக செயலாற்றல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 49 சதவீதம் தொடக்கம் 97 சதவீதம் எனும் வீச்சிற்கும் காணப்பட்டது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 59.06 மில்லியன் தொகையான கட்டணங்கள் ஒப்பந்தப்பொதி 03 இன் கீழாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலையினை பூர்த்தியாக்கலில் 2,466 நாட்களிற்கும் மேலான தாமதத்தின் மீது 08 பாலங்களின் நிர்மானத்தில் ஈடுபட்டிருந்த ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிதி நன்மைகளை பெற்றுக்கொள்வதற்கு ஒப்பந்ததாரரிற்கு காணப்படும் சாத்தியம் ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முறனாக காணப்படுகின்றது. | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவானது நெருக்கடியான நடவடிக்கைகளின் நிர்மானத்தின் போதான ஒப்பந்ததாரரின் காசுப்பாய்ச்சலினை பாதிக்காத வகையில் நியயமான முறையில் தாமதக் கட்டணங்களினை கழிக்க படிமுறை எடுத்துள்ளது. | நிர்மான வேலைகளை கண்காணிக்க முறையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |